THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.143 /2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Witness | : | PW1 | Caste | : | |
| Name | : | மணி | Age | : | 43 |
| S/o | : | குழந்தைவேல் | Occupation | : | விவசாயம் |
| Village | : | மணக்குடி | | | |
| Taluk | : | பரமக்குடி | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 12th day of August 2026.

**12.08.2026**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 2 முதல் 5 எதிரிகள் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 1 முதல் 5 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை**

1. நான் விவசாயம் செய்து வருகிறேன். அது தவிர காட்டு கருவேல மரங்களை வாங்கி, வெட்டி விற்பனை செய்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. நான் ரூபாய் 24 இலட்சம் எதிரிகளிடம் கொடுத்ததாக சொல்லும் நிலையில் அதற்கு ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் ஆம், பத்திரம் எழுதினோம். காட்டு கருவேல மரங்களை வெட்டுவதற்காக எதிரிகள் என்னிடம் பணம் பெற்றுக்கொண்டு திருப்பி தரவில்லை என கடந்த 04.10.2013 ம் தேதியன்று நான் இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதன் பின்னர் 27.02.2014 ம் தேதியன்று மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளரிடம் புகார் அளித்தேன் என்றால் சரிதான். நான் 27.02.2014 ம் தேதியன்று மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளரிடம் கொடுத்த புகாரின் மீது தான் எதிரிகள் மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட தேதியில் எனது உடன்பிறந்த சகோதரர் திரு.ஜெ.கே.ரித்தீஷ் என்பவர் இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதியில் உறுப்பினராக இருந்தார் என்றால் சரிதான்.

2. நான் 04.10.2013 ம் தேதியன்று கொடுத்த புகாரும், 27.02.2014 ம் தேதியன்று கொடுத்த புகாரும் இரண்டும் வெவ்வேறு புகார் என்றால் சரிதான். நான் 27.02.2014 ம் தேதியன்று கொடுத்த புகாரில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும், எனது சகோதரரின் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. 27.02.2014 ம் தேதியன்று நான் புகார் அளித்தபோது ஒப்பந்த ஆவணம் எதுவும் காவல்துறையினரிடம் கொடுத்தேனா என்றால் ஆம், கொடுத்தேன். நான் சொன்ன தேதியில், இடத்தில் வைத்து எதிரிகள் என்னிடம் எந்தவித தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் அளித்த பின்னர் காவல்துறையினர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் ஆம். நான் நீதிமன்றத்தில் எனது முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால்

சரிதான். இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.08.12 18:16:22 +0530